**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.I, திண்டிவனம்,**

**முன்னிலை: ஸ்ரீமதி. ம. இளவரசி M.L.,**

**நீதித்துறை நடுவர் எண். I திண்டிவனம்.**

**2026 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15 -ம் நாள் திங்கள்கிழமை**

**2056 திருவள்ளுவராண்டு ஸ்ரீபராபவ வருடம் ஆனி திங்கள் 01-ம் நாள்**

**CC. No.624 of 2025**

**(CNR No.TNVP10-00936-2026)**

| | | | |
|---|---|---|---|
| 1) | வழக்கு எண் | : | C.C.No.624/2025 |
| 2 | குற்ற முறையீடுபவர் | : | தமிழ்நாடு அரசு அதன் சார்பாக<br>காவல் உதவி ஆய்வாளர்,<br>திண்டிவனம் காவல் நிலையம்,<br>குற்ற எண்.683/2024,<br>பிரிவுகள் 296(b), 115(2), 118(1), 351(3) BNS |
| 3 | எதிரியின் விவரம் | | சிவா, வயது 46,<br>த/பெ விஸ்வநாதன்,<br>நெ.17, நேரு வீதி,<br>பெரியார் நகர்,<br>ஆழ்வார் திருநகர்,<br>திருவள்ளூர் மாவட்டம். |
| 4 | சம்பவ தேதி | : | 15.12.2024 |
| 5 | முறையீடு | : | 15.12.2024 |
| 6 | எதிரி நீதிமன்ற காவலில் இருந்த நாள் | : | 17.12.2024 to 31.12.2024 = 15 days |
| 7 | குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 09.10.2025 |
| 8 | குற்றச்சாட்டு வனையப்பட்ட நாள் | : | 04.02.2026 |

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.06.15 07:07:28 +0530

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9 | தாக்கல் செய்யப்பட்ட குற்ற பல்வகை மனுக்களின் விவரம் | : | ---- | | |
| 10 | சாட்சிகளின் விசாரணை | : | **Witness** | **Date of Chief** | **Date of Cross** |
| | | | PW-1 | 03.06.2026 | No Cross |
| | | | PW-2 | 03.06.2026 | No Cross |
| | | | PW-3 | 03.06.2026 | No Cross |
| | | | PW-4 | 10.06.2026 | 10.06.2026 |
| | | | PW-5 | 10.06.2026 | 10.06.2026 |
| | | | PW-6 | 12.06.2026 | 12.06.2026 |
| 11 | பிரிவு 351(1)(பி) BNSS ன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | : | 15.06.2026 | | |
| 12 | எதிரிகள் தலைமறைவு காலம் பற்றிய விவரம் | : | இல்லை | | |
| 13 | மேல்முறையீடு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவு பற்றிய விவரங்கள் | : | இல்லை | | |
| 14 | தண்டனை அல்லது உத்தரவு | : | எதிரி மீது இதச பிரிவுகள் 296(b), 115(2), 118(1), 351(3) BNS- ன் கீழான குற்றமானது அரசு தரப்பு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படாததால் எதிரி குற்றவாளி இல்லை என தீர்மானித்து பிரிவு 271(1) BNSS- ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. | | |
| 15 | காலதாமதத்தின் விளக்கம் | : | ___ | | |

ELAVARASI

Digitally signed by ELAVARASI
Date: 2026.06.15 07:07:37 +0530

இவ்வழக்கானது கடந்த 09.10.2025-ம் தேதி இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு, இந்த வழக்கானது இந்நீதிமன்றத்தில் 12.06.2026-ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது, அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை 2 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.D.முத்து B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், விசாரணைக்கு வரப்பெற்று இருதரப்பு வாதம் கேட்கப்பட்டு பின்பு வழக்கு ஆவணங்களையும் பரிசீலக்கப்பட்டு இன்று இந்நீதிமன்றத்தில் வழங்கும்.,

## தீர்ப்புரை

**1) குற்ற அறிக்கையின் சுருக்கம்:-**

1வது சாட்சி விஸ்வநாதன் என்பவரும் அவரது மனைவியான 2வது சாட்சி குப்பு என்பவரும் வீட்டில் இருந்தபோது 1வது சாட்சியின் மகனான எதிரி சிவா என்பவர் 15.12.2024 அன்று மாலை சுமார் 16.00 மணியளவில் வீட்டுக்கு வந்த சிவா என்பவர் 2 வது சாட்சியை பார்த்து ஓத்தா தேவிடியா எத்தன நாளா இந்த வீட்ட என் பெயருக்கு எழுதி வைக்க சொல்லி கேக்குறது அசிங்கமாக திட்டியபோது இதை பார்த்து தடுக்கப்போன 1வது சாட்சி விஸ்வநாதன் என்பவர் ஏண்டா இப்படி கேக்குறனு கேட்டதற்கு எதிரியானவர் அங்கிருந்த உருட்டு கட்டையை எடுத்து 1வது சாட்சியின் வலது பக்க தலையில் அடித்து சொற்ப காயத்தை ஏற்படுத்தி இந்த வீட்டை என் பெயரில் எழுதி வைக்கவில்லை என்றால் இந்த உருட்டு கட்டையாலே அடித்து கொலை செய்துவிடுவேன் என்று கொலை மிரட்டல் விடுத்து குற்றம் புரிந்ததாக எதிரி மீது பிரிவுகள் 296(b), 115(2), 118(1), 351(3) BNS ன்படி திண்டிவனம்

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.06.15 07:07:43 +0530

காவல் உதவி ஆய்வாளர் அவர்களால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) இந்நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்ட இவ்வழக்கானது பிரிவுகள் 296(b), 115(2), 118(1), 351(3) BNS - ன் கீழ் விசாரணைக்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3) எதிரி நீதிமன்றத்தில் ஆஜரான போது வழக்கு ஆவணங்களின் நகல்கள் பிரிவு 230-BNSS-ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

**4)** வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்ததில் எதிரி மீது குற்றச்சாட்டு வினவுவதற்கு போதுமான முகாந்திரம் இருந்ததால் எதிரி மீது பிரிவுகள் 296(b), 115(2), 118(1), 351(3) BNS - ன் கீழான குற்றச்சாட்டுகள் குறித்து வனைந்து விளக்கி கூறி வினவிய போது எதிரி அவற்றை மறுத்து தான் குற்றவாளி இல்லை என்று கூறியதால் அரசு தரப்பில் சாட்சி விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

5) இந்த வழக்கில் அரசுத்தரப்பில் அ.சா. 1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் முன்னிடப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் சாட்சியம் அளிக்கப்படவில்லை.

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.06.15 07:07:48 +0530

**6) வழக்கின் சுருக்கம்**

➔ காயம்பட்ட மற்றும் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 சம்பவம் பற்றியும் புகார் அளித்தது பற்றியும் சாட்சியம் அளித்துள்ளார்.

➔ கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 அ.சா.1ஐ யார் அடித்தார்கள் என்று தனக்கு தெரியாது என தெரியாது என அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவளிக்காமல் சாட்சியம் அளித்துள்ளார் .

➔ கேள்வியுற்ற சாட்சியான அ.சா.3 சம்பவத்தை கேள்வியுற்றதாக அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவளிக்காமல் சாட்சியம் அளித்துள்ளார்.

➔ பார்வை மகசர் சாட்சிகளான அ.சா.4 மற்றும் அ.சா.5 ஆகியோர் பார்வை மகசரில் கையொப்பம் செய்தது பற்றி சாட்சியம் அளித்துள்ளனர்.

➔ காவல் உதவி ஆய்வாளர் அ.சா.6 வழக்கின் புலன் விசாரணை பற்றி சாட்சியம் அளித்துள்ளார்.

7). அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து எதிரியை பாதிக்கக்கூடிய அம்சங்கள் குறித்து எதிரியிடம் பிரிவு 351(1)(ஆ)-ன் BNSS படி வினவியபோது எதிரி பொய் சாட்சி என்றும், பொய் வழக்கு என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று தெரிவித்தார். எனவே, எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

8) **தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை:-**

**இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில் பிரிவுகள் 296(b), 115(2), 118(1), 351(3) BNS - ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.**

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.06.15 07:07:54 +0530

9. வாய்மொழி வாதம் கேட்கப்பட்டது. வழக்கு கோப்பு மற்றும் சாட்சியங்கள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

10. அரசு தரப்பில் வாய்மொழி வாதம் முன் வைக்கப்படவில்லை.

11. எதிரி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் காயம்பட்ட சாட்சியான அ.சா.1 மற்றும் கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 ஆகியோர் அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பட சாட்சியம் அளித்துள்ளனர். மற்ற சாட்சிகள் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவளிக்காமல் பிறழ் சாட்சியம் அளித்துள்ளனர். எனவே சந்தேகத்தின் பலனை அளித்து எதிரியை குற்றவாளி அல்ல என தீர்மானித்து விடுதலை செய்யுமாறு வாதிட்டார்.

**12) சாட்சிய பரிசீலனைகளும், தீர்வும் :**

நிகழ்நிலை புகார்தாரரும் காயம்பட்ட சாட்சியுமான **அ.சா.1 திரு. விஸ்வநாதன்** அவரது சாட்சியத்தில் சுமார் 1 வருடத்திற்கு முன்னர் ஒரு நாள் மாலை 6.00 மணிக்கு தான் தனது வீட்டிலிருந்தபோது யாரோ இரண்டு நபர்கள் வந்து கொம்பால் தனது தலையில் அடித்துவிட்டார்கள் எனவும், தான் எழுந்து பார்க்கும்பொழுது அவர்கள் ஓடிவிட்டார்கள் எனவும், தன்னை அடித்த நபர்கள் யார் என்று தெரியவில்லை எனவும், அடிபட்ட தான் திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றார் எனவும், தான் மருத்துவமனையிலிருந்தபோது போலிசார் வந்த விசாரித்து கையொப்பம் பெற்றார்கள் எனவும், தனது மகன் மீது நினைவில்லாமல் புகார்

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.06.15 07:08:02 +0530

கொடுத்தார் எனவும், போலீசார் வழக்கு சம்மந்தமாக தன்னை விசாரித்தார்கள் எனவும் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவளிக்காமல் சாட்சியம்அளித்துள்ளார்.

13. அ.சா.1 ன் மனைவியும், கண்ணுற்ற சாட்சியாக முன்னிலைப்படுத்தப்பட்ட **அ.சா.2 திருமதி.குப்பு** அவரது சாட்சியத்தில் சுதார் 1 வருடத்திற்கு முன்னதாக மாலை சுமார் 7 மணிக்கு தான் தனது வீட்டிலிருந்தபோது வெளியில் கூட்டமாக இருந்தார்கள் எனவும், தான் வந்து பார்த்தபோது கணவருக்கு மண்டையில் அடிபட்டிருந்தது யார் அடித்தார்கள் என தெரியாது எனவும், அடிபட்ட தனது கணவரை திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றதாகவும் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவளிக்காமல் சாட்சியம்அளித்துள்ளார்.

14. கேள்வியுற்ற சாட்சியான **அ.சா.3 திருமதி.பத்மா** அவரது சாட்சியத்தில் ஆஜர் எதிரி தனது அண்ணன் எனவும், சில வருடத்திற்கு முன்னதாக தான் சென்னையிலிருந்தபோது இரவு 10 மணியளவில் தனது அம்மா தனக்கு போன் செய்து அப்பாவிற்கு அடிபட்டது என்று சொன்னார் எனவும், தான் உடனே வீட்டிற்கு வந்து பார்த்தபோது அப்பாவிற்கு தலையில் அடிபட்டிருந்தது எனவும், எப்படி அடிபட்டது என்று தனது அப்பாவை கேட் டபோது யாரோ அடித்துவிட்டதாக சொன்னார் எனவும், வழக்கு சம்மந்தமாக போலீசார் விசாரிக்கவில்லை எனவும் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவளிக்காமல் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 முதல் அ.சா.3 ஆகியோர் பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

ELAVARASI Digitally signed by ELAVARASI
Date: 2026.06.15 07:08:12 +0530

செய்யப்பட்டுள்ளனர். எனினும் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக எவ்வித சாட்சியமும் முன்னிடவில்லை.

15. பார்வை மகசர் சாட்சியாக முன்னிலைப்படுத்தப்பட்ட **அ.சா.4 திரு.காசிநாதன்** தனது சாட்சியத்தில் பார்வை மகசரில் உள்ள 1 வது கையொப்பம் தன்னுடையதுதான் எனவும், 2 வது சாட்சி கையொப்பம் தனது மகன் ராமச்சந்திரனுடையதுதான் எனவும், கடந்த 2024 ம் வருடம் தேதி, மாதம் நினைவில்லை எனவும், காலை சுமார் 8.30 மணியளவில் ராமதாஸ் நகரிலுள்ள தனது வீட்டிலிருந்தபோது சண்டை நடந்த ஆஜர் எதிரியின் வீட்டின் அருகே படம் வரைந்து கொண்டு தனது வீட்டில் வந்து போலீசார் தன்னிடம் கையொப்பம் பெற்றதாகவும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை எனவும் சாட்சியம் அளித்துள்ளார். எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில் வழக்கின் குற்ற எண் தெரியாது, சண்டை வழக்கு எனவும் குறிப்பிட்டுள்ளார்.

16. மற்றொரு பார்வை மகசர் சாட்சியாக முன்னிலைப்படுத்தப்பட்ட **அ.சா.5 திரு.ராமச்சந்திரன்** தனது சாட்சியத்தில் பார்வை மகசரில் உள்ள 2 வது கையொப்பம் தன்னுடையதுதான் எனவும், 1 வது சாட்சி கையொப்பம் தனது அப்பாவுடையது எனவும், சுமார் 2 வருடத்திற்கு முன்பு தான் தனது வீட்டிலிருந்தபோது திண்டிவனம் காவல் நிலைய போலீசார் வந்து சண்டை சம்மந்தமாக விசாரித்து தன்னிடம் கையொப்பம் பெற்றதாகவும், அதிலுள்ள விவரம் தெரியாது எனவும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை எனவும் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவளிக்காமல்

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.06.15 07:08:21 +0530

சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.5 பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

17. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி **அ.சா.6 திரு. முருகானந்தம் காவல் உதவி ஆய்வாளர்** அவரது சாட்சியத்தில் கடந்த 15.12.2024 அன்று திண்டிவனம் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வந்த அ.சா.1 விஸ்வநாதன் என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று அன்றைய தினம் 19.50 மணிக்கு நிலையம் வந்து சி.எஸ்.ஆர் 966/2024 வழங்கப்பட்டது எனவும், 16.12.2024 அன்று 17.30 மணிக்கு மேற்படி மனு ரசீதை பார்வையிட்டு நிலைய குற்ற எண்.683/2024 பிரிவுகள் 296(b), 115(2), 118(1), 351(3) BNS ன்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் எனவும், பின்னர் 17.12.2024 அன்று காலை 8 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் காசிநாதன் மற்றும் ராமச்சந்திரன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார் எனவும், பின்னர் வழக்கின் சம்பவ சாட்சிகளான விஸ்வநாதன், குப்பு, பத்மா ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் எனவும், சாட்சிகளின் விசாரணயிலிருந்து சம்பவம் உண்மை என தெரிய வர எதிரியை தேட அன்றைய தினம் பகல் 12 மணியளவில் எண்டியூர் கிராமம் பாலத்தின் அருகே எதிரி சிவாவை காரணம் கூறி கைது செய்து 13 மணிக்கு நிலையம் வந்து திரேக பரிசோதனைக்கு பிறகு பாரா வசம் ஒப்படைத்துள்ளார் எனவும், உதவி ஆய்வாளர் செந்தில்முருகன்

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.06.15 07:08:29 +0530

பணிமாறுதல் காரணமாக சென்றுவிட்டதால் இவ்வழக்கினை தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு இந்த வழக்கில் காயம்பட்ட விஸ்வநாதன் என்பவருக்கு மருத்துவ சிகிச்சை அளித்த உதவி மருத்துவர் புருஷோத்தமன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பெற்று காயச்சான்று பெற்றார் எனவும், பின்னர் வழக்கினை விசாரணை முடித்து பிரிவுகள் 296(b), 115(2), 118(1), 351(3) BNS ன்படி குற்றஇறுதி அறிக்கை தாக்கல் செய்தார் எனவும் சாட்சியம் அளித்துள்ளார். எதிரி தரப்பில் அ.சா.6 குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

18. 15.12.2024 அன்று மாலை சுமார் 16.00 மணியளவில் எதிரி சிவா என்பவர்அ.சா.2-யை பார்த்து ஓத்தா தேவிடியா பையா என அசிங்கமாக திட்டியதை கேட்ட அ..சா.1 விஸ்வநாதன் என்பவர் ஏண்டா இப்படி கேக்குறனு கேட்டதற்கு எதிரியானவர் அங்கிருந்த உருட்டு கட்டையை எடுத்து அ.சா.1 ன் வலது பக்க தலையில் அடித்து சொற்ப காயத்தை ஏற்படுத்தி உருட்டு கட்டையை காட்டி கொலை மிரட்டல் விடுத்ததாக அரசு தரப்பு வழக்காகும்.

19. பாதிக்கப்பட்ட சாட்சியான அ.சா.1 அவருக்கு காயம்பட்டது பற்றி சாட்சியமளித்த போதிலும், அ.சா.1 ஆனவர் அவரது சாட்சியத்தில் யாரோ இரண்டு நபர்கள் தனது தலையில் கொம்பால் அடித்துவிட்டார்கள், யார் என்று தெரியவில்லை என அரசு தரப்பு வழக்கிற்கு ஆதவரளிக்காமல் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அ.சா.1 அளித்த புகாரில் அவரது மகனான எதிரியின் பெயரை குறிப்பிட்டுள்ள நிலையில் அவரது

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.06.15 07:08:36 +0530

சாட்சியத்தில் யாரோ அடித்துவிட்டதாக எதிரியின் பெயரை குறிப்பிடாமல் கூறியுள்ளார். எதிரி அடித்ததாக அறுதியிட்டு அ.சா.1 அவரது சாட்சியத்தில் சொல்லவில்லை. மேலும் கண்ணுற்ற சாட்சியும், அ.சா.1ன் மனைவியுமான அ.சா.2 ஆனவரும் அ.சா.1-யை யார் அடித்தார்கள் என்று தனக்கு தெரியாது என அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவளிக்காமல் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 ன் மகளான அ.சா.3 சம்பவத்தை கேள்வியுற்றதாக சாட்சியம் அளித்துள்ளார். மேற்கண்ட சம்பவம் குறித்து சம்பவ இட சாட்சிகள் எதிரிக்கு எதிராக எவ்வித சாட்சியமும் முன்னிடப்படவில்லை. பார்வை மகசர் சாட்சியான அ.சா.4 எதிரி வீட்டின் அருகில் பார்வை மகசரில் கையொப்பம் செய்ததாகவும், அ.சா.5 அவரது வீட்டில் பார்வை மகசரில் கையொப்பம் செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளனர். காவல் உதவி ஆய்வாளர் அ.சா.6 வழக்கின் புலன் விசாரணை பற்றி சாட்சியம் அளித்துள்ளார். எனவே மேற்படி சாட்சிகளிலிருந்து இவ்வழக்கின் எதிரியானவர் அ.சா.1-யை அசிங்கமாக திட்டி உருட்டு கட்டையை எடுத்து அ.சா.1 ன் வலது பக்க தலையில் அடித்து சொற்ப காயத்தை ஏற்படுத்தி உருட்டு கட்டையை காட்டி கொலை மிரட்டல் விடுத்ததாகவோ கூறப்படும் குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

20. அரசு தரப்பு சாட்சியங்கள் அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் மற்றும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள்படியாக பிரிவுகள் 296(b), 115(2), 118(1), 351(3) - BNS ன் கீழான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமற்ற வகையில் நிரூபணம் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.06.15 07:08:43 +0530

**21. இறுதியாக, எதிரி மீது பிரிவுகள் 296(b), 115(2), 118(1), 351(3) - BNS ன் கீழான குற்றமானது அரசு தரப்பு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படாததால் எதிரி குற்றவாளி இல்லை என தீர்மானித்து பிரிவு 271(1) BNSS- ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.**

22. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. எதிரி எழுதிக்கொடுத்த பிணைப்பத்திரம் அது இதன் மூலம் ரத்து செய்யப்படுகிறது.

என்னால் இத்தீர்ப்புரை சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக கணினயில் சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு ஜூன் திங்கள் 15 -ம் திங்கள்கிழமை 2026-ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.06.15 07:08:49 +0530

நீதித்துறை நடுவர் எண். I,
திண்டிவனம்.

**இணைப்பு:-**

**அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்:-**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | திரு.விஸ்வநாதன் | காயம்பட்டசாட்சி மற்றும் நிகழ்நிலை புகார்தாரர் |
| அ.சா.2 | திருமதி.குப்பு | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.3 | திருமதி.பத்மா | கேள்வியுற்ற சாட்சி |
| அ.சா.4 | திரு.காசிநாதன் | பார்வை மகசர் சாட்சி |

| | | |
|---|---|---|
| அ.சா.5 | திரு. ராமச்சந்திரன் | பார்வை மகசர் சாட்சி |
| அ.சா.6 | திரு.முருகானந்தம் காவல் உதவி ஆய்வாளர் | புலன் விசாரணை அதிகாரி |

**அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்**:-

| **அ.சா.ஆ. எண்கள்.** | **தேதி** | **ஆவணங்களின் விபரம்** | **ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்ட சாட்சிகள்** |
|---|---|---|---|
| அ.சா.ஆ.1 | 15.12.2024 | புகார் மனு | அ.சா. 1 |
| அ.சா.ஆ.2 | ------ | பார்வை மகசரில் உள்ள அ.சா.4 ன் கையொப்பம் | அ.சா. 4 |
| அ.சா.ஆ.3 | ------ | பார்வை மகசரில் உள்ள அ.சா.5 ன் கையொப்பம் | அ.சா.5 |
| அ.சா.ஆ.4 | 16.12.2024 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.6 |
| அ.சா.ஆ.5 | 17.12.2024 | பார்வை மகசர் | அ.சா.6 |
| அ.சா.ஆ.6 | 17.12.2024 | மாதிரி வரைபடம் | அ.சா.6 |
| அ.சா.ஆ.7 | 15.12.2024 | அ.சா.1 ன் விபத்து பதிவேட்டுடன் கூடிய சாயச்சான்று | அ.சா.6 |

**அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றுப்பொருட்கள்**:- இல்லை

**எதிரி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**:-இல்லை

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.06.15 07:08:54 +0530

நீதித்துறை நடுவர் எண். I,

திண்டிவனம்.